(இ) அதே வசதிகள் பல்லவா போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலும் தொடர்ந்து கொடுக்கப்பட்டு வருகிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமசந்திரன் : (அ) 1971-72-ஆம் ஆண்டில், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறைப் பேருந்து களில் இலவசமாகப் பயணம் செய்ய, உடல் ஊனமுற்ற 91 பேருக்கு இலவசப் பயணச் சலுகைகள் வழங்கப்பட்டன.

(இ) ஆம்.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவரவர்களே, உடல் ஊனமுற்றவர் களுக்கு இத்தகைய இலவச அனுமதிச்சீட்டு வழங்குவதுடன் அவர்களைக் கூட்டிச்செல்லும் அவர்களுடைய உதவியாளர்களுக் கும் இத்தகைய இலவச அனுமதிச்சீட்டு வழங்கப்பட வேண்டும் என்று அரசுக்கு விண்ணப்பம் வந்திருக்கிறதா ? அப்படியானல் அரசு அதுபற்றி என்ன முடிவெடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, உடல் ஊனமுற்றவர்களைக் கூட்டிச் செல்பவர்களுக்கு இப்போது அத்தகைய இலவச அனுமதிச் சீட்டுக்கள் வழங்கப்படுவது இல்லை. அவசியமானல் அதைப்பற்றி அரசு பரிசிலனை செய்யும்.

Ex-servicemen in Thanjavur district

* 119 Q.—THIRU SAW. GANESAN (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) the number of ex-servicemen living in the district of Thanjavur;

(*b*) the number of employed and unemployed; and

(*c*) the number of persons to whom lands have been assigned freely?

தஞ்சை மாவட்ட முன்னாள் படை வீரர்கள்

திரு. சா. கணேசன் (திரு ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக் களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தஞ்சை மாவட்டத்தில் வாழ்ந்துவரும் முன்னாள் படை வீரர்கள் எத்தனை பேர் ?

1972 ஆகஸ்ட் 19]

(இ) அவர்களில் இப்போது வேலை செய்து வருபவர்கள் எத்தனை பேர்? வேலையில்லாதிருப்போர் எத்தனை பேர்?

(உ) அவர்களில் எத்தனை பேருக்கு இலவசமாக நிலங்கள் கொடுக்கப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) 4,859.

	வேலையில் இருப்போர்	வேலை இல்லாமலிருப்போர்
(இ)	158	748

(உ) 131

THIRU G. VASANTHA PAI : Sir, in view of the fact that after the nationalisation of Transport, the Ex-Servicemen Co-operatives are losing their permits, will the Government consider the possibility of employing the Drivers and Conductors of the Ex-Servicemen Co-operatives as Drivers and Conductors in the nationalised undertakings?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அரசுத் துறையில் ஏற்படும் காலியிடங்கள் எதுவாக இருந்தாலும், முன்னாள் இராணுவ வீரர்களுக்கே அவற்றில் முதற்சலுகை அளிக்கப்படுகிறது. அந்த அடிப்படையில் போக்குவரத்துத் துறையாக இருந்தாலும், அப்படிப்பட்ட சலுகை கொடுக்கப்படும்.

Soldiers', Sailors' and Airmen's Board of Thanjavur district

* 120 Q.—THIRU SAW. GANESAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether it is a fact that the Vice-President of District Soldiers', Sailors' and Airmen's Board of Thanjavur district, has not been provided with any office accommodation and entrusted with any responsibilities;

(b) if so, the period for which there is such a situation; and

(c) the action proposed to be taken in the matter?